# சுசீலாவின் தீர்மானம்

காலையில் படுக்கையை விட்டு எழுந்ததுமே நான்
தீர்மானித்து விட்டேன்: 'இனிமேல் எந்தக் காரணம்
கொண்டும் ஒரு கணங்கூட இந்த 'நர்ஸிங் ஹோமி'ல்
நோயாளியாக அடைபட்டிருப்பது கூடாது. இன்றே
டாக்டரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு வீட்டுக்குக்
கிளம்பி விடுவது' என்பதுதான் அந்தத் தீர்மானம். ஆறு
மாத காலமாக நோயாளி என்று சுற்றத்தவர்களைப் பிரிந்து
'டாக்டர் நாராயணன் நர்ஸிங் ஹோமி'லே படுத்திருந்த
எனக்கு என் நோயின் மீதும்—ஏன், வாழ்க்கை மீதும்—
அலுப்பு ஏற்பட்டிருந்தது. மேலும் நேற்று வார்டிலே தமது
ரவுண்டுக்கு வந்த டாக்டர் நாராயணனிடம் பேசிய பின்பு
என் மனம் மேற்கண்ட தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

''ஆறு மாத காலமாக இங்கே தங்கியிருந்தேனே
டாக்டர்! இன்னும் என் நோய் என்னை விட்ட
பாடில்லையே!'' என்று டாக்டரி மிகவும்டம் அலுப்புடன்
வினவினேன்.

டாக்டர் வழக்கம்போல் புன்னகையுடன், ''அம்மா!
உங்கள் நோயைப் பறறி நீங்களும் அறிவீர்கள். நானும்

அறிவேன். அன்று ஆரம்பத்திலே கூறியதைத் திரும்பச் சொல்லச் சொல்கிறீர்களா?'' என்றார்.

நான் அதற்குப் பதில் பேசவில்லை. அவர் மௌனமாக என்னைப் பார்த்துச் சிந்தனையுடன் தலையை அசைத்து விட்டு, ''அடுத்த வாரம் வேறு சில புது மருந்துகளை உங்களுக்குக் கொடுத்துப் பார்க்க உத்தேசித்திருக்கிறேன். ஒரு சமயம் அதில் ஏதாவது குணம் ஏற்படலாம் என்று நினைக்கிறேன்'' என்றார்.

டாக்டர் வார்டின் மறு கோடிக்குச் சென்று மறையும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்த என் கண்களில் லேசாக நீர் துளித்தது. துக்கம் நெஞ்சைப் பலமாக அமுக்கியது. 'சே! என்ன ஜன்மம்' என்று என்மீதே எனக்கு வெறுப்புப் பொங்கி எழுந்தது.

பூசினாற்போல் தடித்த மேனியும்! செழுமையான தோற்றமும் கொண்ட என்னைப் பார்த்தால் யாரும் நோயாளி என்றே நினைக்க மாட்டார்கள். இரண்டொரு வைத்தியர்கள் கூட அப்படித்தான் சொன்னார்கள். ''உங்களுக்கு ஒரு வித நோயும் இல்லை. மனப்பிரமை!'' என்று அவர்கள் சொன்னபொழுது, எனக்கு அவர்கள் மேல் கோபம் வரத்தான் செய்தது. வேறு சில வைத்தியர்கள் அப்படிச் சொல்லி என் மனத்தாங்கலுக்கு ஆளாக விரும்பாது, எனது நோய்க்கு வித விதமான விசித்திரப் பெயர்களைச் சூட்டினார்கள். நரம்புத் தளர்ச்சி, மூளைக் கொதிப்பு என்று அவர்கள் நாமகரணம் செய்த எனது நோய்க்காக நான் கடந்த நான்கு வருஷங்களாகப் பார்க்காத வைத்தியம் பாக்கி இல்லை; சாப்பிடாதமருந்துகளும் பாக்கி இல்லை.

பணத்தைத் தண்ணீர் போல் எனக்காகச் செலவழித்த என் கணவர் கடைசியில் என் வேண்டுகோளை மறுக்க முடியாது, 'டாக்டர் நாராயண நர்ஸிங் ஹோமி'லே என்னை ஆறு மாத காலம் தங்க அநுமதித்தார். நரம்பைப்



பற்றிய நோய்களில் தனியாக ஆராய்ச்சி செய்து பிரசித்தி பெற்றிருந்த டாக்டர் நாராயணனாவது என் நோயைத் தீர்க்கமாட்டாரா என்ற நம்பிக்கையில் நான் இங்கே வந்துக தங்கினேன்.

என்னைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர் மற்றவர்களைப்போல் சட்டென்று என் நோயைத் தீர்மானித்து விடவில்லை. இது எப்படி ஆரம்பித்தது என்று அதனுடைய பூர்வோத்தரங்களைப் பற்றி விசாரிக்கத் தொடங்கி விட்டார்.

அன்று அவர் என்னிடம் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு அவர்மீது கோபம் பற்றிக் கொண்டு வந்தது. தொப்பென்று படுக்கையினின்று குதித்து வீட்டிற்கு ஓடிவிட வேண்டும் என்று ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது.

''உங்களுக்கு வரும் இந்த மயக்கம் முதலில் தானாக வரவில்லை, அம்மா! உங்கள் கணவர் ஒரேயடியாக ஆபீஸ் வேலையிலே முழுகிக் கிடக்கிறார். நீங்களோ பொழுதைச் செலவழிப்பது எப்படி என்று தெரியாது தத்தளித்துக். கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஓரகத்தியும் மைத்துனரும் புதிய தம்பதி. அவர்களிடையே காணும் அந்யோன்ய பாவம், நீங்கள் ஒரு காலத்தில் இருந்ததை நினைவூட்டுகிறது குடும்பத்தை மறந்து தமது தொழிலிலே மூழ்கியிருக்கும் கணவர் மீது உங்கள் மனம் கோபம் கொள்கிறது. இது நாளாவட்டத்தில் ஒரு குறையாக உங்கள் மனத்தை அரித்துக் கொண்டே வருகிறது. தாய் அடித்துவிட்டால் குழந்தை என்ன செய்கிறது? அழுகிறது. ஆனால் யார் சமாதானம் செய்தாலும் லேசில் குழந்தை சமாதானம் அடைவதில்லை. அடித்த தாயே அணைத்தால் ஒழிய அந்தப் பிஞ்சு உள்ளம் திருப்தியடைவதில்லை. சில சமயம் நமது மனமும் குழந்தை மனத்திலிருந்து அபிவிருத்தி அடைவதில்லை. புறக்கணிப்பதாக நீங்கள் கருதியிருக்கும்

கணவன் கருத்தைக் கவராத வரை உங்களுக்கு நிம்மதி ஏற்படுவதாயில்லை. அவர் கவனத்தைக் கவர உங்களுக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது. அதுதான் அவரது பச்சாத்தாபத்தைத் தூண்டும் முறை.''

இப்படிப் படபடவென்று பேசிக்கொண்டு போன டாக்டரின் வார்த்தைகள் என் மனத்தில் வேல்போல் தாக்கவே நான் முகத்தைச் சுளித்தேன்.

''உண்மை கசப்பானது அம்மா! முதலிலே உங்களுக்கு ஏற்பட்ட மயக்கம் தானாக வருவிக்கப்பட்டது. மயக்கம் என்றதும், எல்லோரும் பயந்து உங்களிடம் ஓடி வந்து உங்களைக் கவனித்துச் சிகிச்சை செய்து, தங்கள் அநுதாபத்தை உங்கள் மீது பொழிவார்கள் என்ற எண்ணத்தினால் தானாகவே ஏற்றுக்கொண்ட போலி மயக்கம்!'' என்றார் கடுமையான அதட்டும் குரலில் டாக்டர்.

அதைக் கேட்டு என் முகம் அவமானத்தினால் சிவந்தது. உதடுகள் துடித்தன. ''இல்லை, டாக்டர், இல்லை இப்பொழுது வரும் மயக்கம் எதிர்பாராத சமயம் தானே வந்துவிடுகிறது. எத்தனையோ தடவை கீழே விழுந்து காயங்கூட ஏற்பட்டிருக்கிறது'' என்றேன் துக்கத்துடன் நான்.

''அதைத்தான் சொல்ல வந்தேன், அம்மா. இந்த மயக்க நோய் உங்களால் வலுவிலே வரவழைக்கப்பட்டது ஆனால் காலக் கிரமத்தில் நீங்கள் அதற்கு அடிமையாகி விட்டீர்கள். உங்கள் அந்தராத்மாவில் சென்று அது குடியேறிவிட்டதனால் அது தற்சமயம் உங்களை ஆட்சி செய்கிறது. நோய் உங்களுக்கு அடிமையாக இருந்தது போய், அதற்கு நீங்கள் தற்சமயம் அடிமையாக இருக்கிறீர்கள். நீங்கள் வேண்டிய சமயம் ஒரு காலத்தில் அதை வரவழைத்து மேற்கொண்ட நிலைமை மாறி அது இஷ்டப்பட்ட சமயம் தோன்றி உங்கள் ஆரோக்கியத்தைச் சீர்



குலைத்துக்கொண்டிருக்கிறது. இதுதான் உங்கள் நோயின் ரகசியம். இதற்கு வைத்தியம் உங்களிடமேயே இருக்கிறது'' என்றார்.

''அதையுந்தான் சொல்லிவிடுங்கள், டாக்டர்!'' என்றேன், கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு.

''இது எப்படிப் படிப்படியாக அபிவிருத்தியடைந்ததோ, அதேபோல் படிப்படியாக அதை நீங்கள் மனம் வைத்தால் குறைத்துவிட முடியும். உங்கள் மன உறுதி இதற்கு முக்கியமாகத் தேவை. இதற்கு வேறு மருந்து இல்லை'' என்று பிரசங்கித்தார். நான் அதற்கு மேல் டாக்டரிடம் எதுவும் பேசவில்லை.

இன்று காலை படுக்கையினின்று எழுந்தபொழுது திடீரென்று என் மனம் ஒரு முடிவுக்கு வந்தது. மன உறுதிதான் என் நோய்க்கு மருந்து என்றால், நான் எதற்காக இனிமேல் இங்கே இருக்கவேண்டும்? காலையில் வார்டுகளைச் சுற்றிப் பார்க்க டாக்டர் வந்தார். வந்தவுடன் நான் அவரிடம் சொன்னேன்: ''டாக்டர், இன்று நான் வீட்டுக்குத் திரும்பிவிட விரும்புகிறேன். என்னைத் தயவு செய்து அனுப்பிவிடுங்கள்.''

ஏற இறங்க என்னை உற்றுப் பார்த்த அவர், ''நாலைந்து நாட்களுக்கு முன் உங்கள் கணவர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். இந்த வார இறுதியில் உங்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவதாக நானே அவரிடம் சொல்லியிருக்கிறேன்'' என்றார்.

''வார முடிவுவரை எதற்கு நான் இங்கே இருக்க வேண்டும்? இன்றைக்கே நான் போகத் தீர்மானித்து விட்டேன். என்னை அனுப்பிவிடுங்கள்'' என்றேன் பிடிவாதமாக.

''பேஷாகச் செல்லுங்கள், அம்மா. இது ஆஸ்பத்திரி. கைதிக்கூடம் அல்ல. நீங்கள் என் கைதியுமல்ல. என்

நோயாளி!'' என்று சிரித்த டாக்டர் தொடர்ந்தாற்போல், ''நீங்கள் இன்றே போகலாம். அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். ஆனால், போகுமுன், உங்கள் காலில் தோன்றியிருக்கும் அந்தச் சிறு கட்டியைக் கிழித்துக் கட்டி அனுப்புகிறேன். பிறகு போங்கள்'' என்றார்.

''வேண்டாம்! அது தானே உடைந்து போகட்டும்'' என்று கிலியுடன் அலறினேன் நான்.

''இல்லையம்மா! மயக்கம் கொடுத்துத்தான் கிழிக்கப் போகிறேன், பயப்படாதீர்கள்'' என்று அவர் வற்புறுத்தினார்.

ரண சிகிச்சை அறையில் மேஜைமீது ஏறிப் படுத்துக் கொண்டேன். தலைக்கு மேல் எரிந்த மின்சார விளக்கின் ஒளி கண்களைக் கூசவே, கண்களை மூடிக்கொண்டேன். உதவி டாக்டர் மயக்கம் கொடுக்க முக மூடியை என் முகத்திலே வைத்து மருந்தை மெல்ல ஊற்றிக் கொண்டிருந்தார். மல்லிகை மலரின் மெல்லிய மணம் நாசியைத் தாக்கியது. பிறகு தொண்டையில் சுரீர் என்ற ஒரு வேதனை. 'சே! சே! எங்கே செல்கிறோம்! ஒரே இருட்டாக இருக்கிறதே!' முக மூடியைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டுக் கூச்சலிட்டுக் கொண்டு எழுந்து ஓட வேண்டுமென்ற அவா. ஆனால் ஒரு பயங்கரமான இருட்டு மேலும் மேலும் வந்து கவ்விக்கொள்ளவே ஒரே அந்தகாரமாகி விட்டது.

''அம்மா, எழுந்திருங்கள். முடிந்து விட்டது'' என்று நர்ஸ் அன்புடன் என் தேளை உலுக்கினாள். விழித்துக் கொண்ட நான் சட்டென்று எழுந்து உட்கார்ந்தன். டாக்டர் வேறு நோயாளிகளைக் கவனிக்கச் சென்று விட்டார். ''நீங்கள் வீட்டிற்குப் போகவேண்டுமென்றால் போகலாம்'' என்றாள் அவள்.

என் சாமான்களைப் பெட்டிக்குள் வைத்துத் தயாராகச் சேகரித்து வைத்திருந்தாள் நர்ஸ். ''உங்கள்



கணவரை டெலிபோனில் கூப்பிட்டு வந்து அழைத்துப் போகச் சொல்லட்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

ஆபீஸ் விடுமுறை தினந்தான். அவர் வீட்டில்தான் இருப்பார். கூப்பிட்டால் வருவார். ஆனால், க்எனகு ஏனோ விருப்பமில்லை. திடீரென்று வீட்டிற்குச் சென்று அவர்கள் அனைவருக்கும் பிரமிப்பை உண்டாக்க விரும்பினேன். எங்கள் பங்களா தொலைவில் இருக்கவில்லை. ஒரு ரிக்ஷாவிலே சென்று வீட்டை அடைந்து விடலாம். எனவே, டெலிபோனில் கூப்பிட வேண்டாம் என்று நர்ஸிடம் கூறிவிட்டு, ஒரு ரிக்ஷாவை வாடகைக்குப் பேசித் தந்தால் போதும் என்றேன்.

அங்கிருந்த ஆள் என் பெட்டியைக் கொண்டு ரிக்ஷாவிலே வைத்து விட்டான். மணிபர்ஸைத் திறந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை ஒரு காகித உறையில் போட்டு எடுத்துக்கொண்டு வராந்தாவின் மறு கோடியிலிருந்த நர்ஸை அணுகினேன்.

''போய் வருகிறேன். இதை வைத்துக்கொள்ளுங்கள்'' என்று உறையை நீட்டினேன். மிகவும் பிகு செய்து கொண்டு பிறகு அவள் அதை வாங்கிக் கொண்டாள்.

''ஞாபகம் இருக்கட்டும்'' என்று கூறிவிட்டுக் கீழே இறங்கிச் செல்லப் படிகள் பக்கம் திரும்பிய நான் அவள் என் பின்னால் ஏதோ இரைந்து பேசுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றேன்.

''போய் வாம்மா, நன்றாகப் போய் வா. ஞாபகத்திற்கு என்ன பஞ்சம்? உன்னைப் போன்றவர்களை மறக்கவா முடியும்! கொழுகொழுவென்றிருக்கும் உன் உடம்பிற்கு என்ன கொள்ளை! மயக்கமாம் மயக்கம்! எடுப்பாரும் பிடிப்பாரும் இருந்தால் பிள்ளை களைத்தாற்போல் விழாதா? பணமும், தாங்குவதற்கு மனிதர்களும் இருந்தால் மயக்கம் ஏன் வராது? நீ இங்கிருந்து சென்றாலே

எங்கள் அனைவருக்கும் பெரிய நிம்மதி. பணத்தைக் கொடுத்துவிட்டோம் என்று ஆறு மாத காலமாக இந்த நர்ஸிங் ஹோமையே தூள் பறக்க அடித்துக்கொண்டிருந்தாயே, அப்பப்பா!'' என்று ஆத்திரத்துடன் கத்தினாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நர்ஸுகளை அடிக்கடி நான் சிறு விஷயங்களுக்கெல்லாம் கூப்பிட்டுத் தொந்தரவு செய்தது என்னவோ வாஸ்தவந்தான். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து நகைமுகத்துடன் உபசரித்த இந்த நர்ஸா இப்படிப் பேசுகிறாள்! மேலே அவள் என்னைத் திட்டிக் கொண்டிருப்பதைக் கேட்கச் சகிக்காத நான், ''நர்ஸ்! என்ன சொல்கிறாய்?'' என்று கோபமும் துக்கமும் தாளாது கேட்டேன்.

என் நெஞ்சு படபடவென்று துடித்தது. உடல் முழுதும் குப்பென்று வியர்த்துவிட்டது.

''ஒன்றுமில்லை, சுகமாகப் போய்வாருங்கள் என்றேன்'' என்று பதிலளித்த அவள் தன் சாயம் தீட்டிய உதடுகளைக் குவித்தபடி புன்முறுவல் செய்தாள்.

''பட்டப் பகலில், சே, என்ன பிரமை!'' என என்னைக் கடிந்து கொண்டபடி கீழே இறங்கிச் சென்று ரிக்ஷாவில் ஏறிக்கொண்டேன். தலைக்குமேல் தகிக்கும் வெயில். கீழே கொதிக்கும் தார். ஒரு ரூபாய் கூலிக்கு ஆசைப்பட்டுக் கொண்டு ரிக்ஷாக்காரன் வண்டியை வேகமாக இழுத்துக் கொண்டு பங்களாவை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். அவன் முதுகின்மீது தொங்கிக் கொண்டிருந்த கந்தல் சட்டை வேர்வையினால் தெப்பலாக நனைந்து கொண்டு வருவதைப் பார்த்த என் மனம் சஞ்சலப் பட்டது.

''ஐயோ பாவம்!'' என்று அவனுக்காக என் மனம் இரக்கமடைந்தது. பங்களாவை அடைந்ததும் கீழே இறங்கினேன். நெற்றிமீது ஆறாகப் பெருகி ஓடிய வேர்வையை அவன் துடைத்துக்கொண்டு பெருமூச்செறிந்தான். கைப்பையைத் திறந்து ஒரு ரூபாயுடன் நாலணா நாணயமொன்றையும் எடுத்துக்கொண்டேன். ''இந்தாப்பா, உனக்குப் பேசிய கூலி ரூபாய் ஒண்ணு. பாவம், வெயிலில். இழுத்து வந்தாயே. இந்த நாலணாவையும் சேர்த்து வைத்துக்கொள்'' என்று இரக்கம் மேலோங்க அவனிடம் கொடுத்தேன்.



கையை நீட்டி வாங்கிய அவன் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. பெட்டியைத் தூக்கிக்கொண்டு உள்ளே திரும்பிய நான் திகைப்புடன் நின்றுவிட்டேன். ''தருமம் செய்துட்டாங்களாம் தருமம்! இந்த நாலணாவுடனே என் தரித்திரம் ஒளிஞ்சு போச்சோ! வெயிலிலே இழுத்து வந்ததைக் கண்டு உருகிப் போனாங்களாம்! உம்! வெயிலிலே ஓடியாடி நான் உழைக்காட்டி என் பெண்சாதி மாரியாத்தா கதி என்ன ஆவுறது? உங்களைப்போல வியாதி ஒண்ணுமில்லாட்டியும், பணத்தைச் செலவழிச்சுக்கிட்டு ஆஸ்பத்திரியிலே படுத்துக் கிடக்க முடியாட்டியும், பத்து நாள் காயிலாவிலே தவிக்கிற அவளுக்கு ஒரு வாய்க் கஞ்சித் தண்ணியாவது வச்சுத் தர வாணாமா நான்? போம்மா போ! தருமம் செய்துட்டதாய் நினைச்சுக்க வேணாம். நீ குடுக்காட்டி நான் சண்டை போட்டுல்ல வாங்கிப் போயிருப்பேன்'' என்று உச்ச ஸ்தாயியில் கத்தினான்.

''என்னப்பா சொன்னேன்?'' என்று பதற்றத்துடன் திரும்பிக் கேட்டேன் நான்.

''ஒண்ணுமில்லீங்களே! உங்க புள்ளே குட்டி சுகமாக இருக்கணும்!'' என்று கும்பிடு போட்டான் அவன். என் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது; கால்கள் தடுமாறின. இதென்ன பிரமை என்று கடிந்துகொண்டு நான் உள்ளே சென்றேன்.

சாப்பிட்ட திருப்தியுட ன் உதடு சிவக்க வெற்றிலை மென்றுகொண்டு கணவனுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த வசந்தாதான் என்னை முதலில் பார்த்தாள். நான் எதிர்பார்த்தபடி அவள் சிறிது வியப்படைந்துதான் போனாள்,

''உங்களை எல்லாம் தொந்தரவு செய்யவேண்டா மென்று நானே புறப்பட்டு வந்துவிட்டேன்'' என்றேன்.

''தொந்தரவா! இனிமேல் எங்களுக்குத் தொந்தரவு கொடுக்க உங்களால் முடியுமா என்ன? நீங்கள் இன்று வருவது தெரியாமல் போயிற்று. வாரக்கடைசியில் வருவ தாகக் கேள்விப்பட்டு நாங்கள் அசட்டையாக இருந்து விட்டோம். நாங்கள் தனிக் குடித்தனம் செய்யக் கிளம்பி விட்டோம். நோயாளி என்று நீங்கள் படுத்துக் கிடப்பீர் கள். ஒரகத்தி—நான் தொண்டு செய்து கொண்டிருப்பேன் என்பது இனிமேல் நடக்கவே நடக்காது'' என்று இரைந்து ஆத்திரத்துடன் கூக்குரலிட்டாள் வசந்தா.

துரைசாமி ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்து நின்றான். ''ஆமாம், மன்னி! இனிமேல் முன்போல் என்னை எடுத்ததற்கெல்லாம் ஏவிக்கொண்டு இருக்க முடியாது. நானும் வசந்தாவும் பிரிந்து வேறு இடத்தில் வசிக்கத் தீர்மானித்து விட்டோம். வசந்தா! கவலைப்படாதே! இன்றைக்கே நாம் வெளியே புறப் பட்டுப் போய்விடுவோம். இனி அரைக் கணங்கூட நீ மன்னிக்கு அடிமையாக இருப்பதை நான் காணச் சகிக்க மாட்டேன்'' என்றான் பல்லைக் கடித்துக்கொண்டு.

வெயிலில் தன்னந் தனியாக வந்த எனக்கு நல்ல வரவேற்புத்தான் இது. அண்ணன் மனைவி என்று மரி யாதையின்றிப் பேசிய அவர்களின் பேச்சு என் மனத்தை மிகவும் வேதனை செய்தது. கோபமும் துயரமும் தாளாது, ''என்ன சொன்னீர்கள்?'' என்று வீரிட்டு அலறினேன்.

''வெயிலிலே வந்திருக்கிறீர்களே, மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்களே, உட்காருங்கள் என்றோம்'' என்று இருவரும் ஒரே குரலில் பதிலளித்தார்கள்.

''சே! மீண்டும் இதென்ன பயங்கரக் கனவு!'' என்று எண்ணமிட்ட நான் தள்ளாடிக்கொண்டு மாடியை அடைந்தேன்.



வழக்கம் போல் என் கணவர் தமது அறையில் ஆபீஸ் காகிதங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தார். சிந்தனை தோய்ந்த அவரது முகம் என் நெஞ்சிலே இரக்கத்தை உண்டாக்கியது. பாவம், ஆறு மாத காலமாக என்னால் சிறிதும் கவனிக்கப்படாது, பாதி யாக இளைத்துக் கறுத்து வாடிப் போயிருந்தார் அவர்.

''சுசீ! ஏன் தனியே வந்தாய்? 'போன்' செய்திருந்தால் காரை எடுத்து வந்திருப்பேனே!'' என்று அன்புடன் விசாரிப்பார் என்று நினைத்த நான், அவர் பதில் பேசாது என்னை முறைத்துப் பார்ப்பதைக் கண்டு கலங்கிப் போனேன். ''நானே புறப்பட்டு வந்துவிட்டேன். உங்க ளுக்குச் சிரமம் வைக்கவிரும்பவில்லை'' என்றேன் மெல்லிய குரலில்.

''வந்துவிட்டாயா? ஆறுமாத காலமாவது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது இன்றுடன் அழிந்ததா? கடந்த நான்கு வருஷங்களாக, இந்த வீட்டில் நான் என்னத்தைக் கேட்டேன்? உனது நோய், உனது மயக்கம், டாக்டர் கொடுத்த மருந்துகள்-இதைத் தவிர வேறு என்னத்தைக் கேட்டேன்? அலுத்துக் களைத்து வீடுவரும் எனக்கு இது வரை நீ ஒரு தம்ளர் ஜலம் எடுத்துக் கொடுத்திருப்பாயா? யோசித்துப் பார்! என் மனக் கவலைகளையோ, தேக சிரமத்தைப் பற்றியோ நீ என்றாவது சிந்தித்திருப்பாயா? சதா நீ உன்னையேதான் நினைத்துக்கொண்டிருந்தாய். நீ உனது நோய், உனது ஆரோக்கியம் என்று சுயநலத்தி லேயே வாழ்ந்தாய். காதல், அன்பு, கடமை-இவை எத் தனை பரிசோதனைகளைத்தாங்கும் என்று நினைக்கிறாய்? அதை எடுத்துக் கொள்கிறவர்களிடம் அந்தக் குணங்கள் சிறிதுகூடப் பிரதிபலிக்காவிட்டால், அந்த உணர்ச்சிகள் கட்டுப்பட்டு எவ்வளவு சோதனைகளைத் தாங்கமுடியும்? சுசீ, போ! நீ இங்கிருந்து போய்விடு, என் வாழ்க்கையை இதுவரை மாசுப்படுத்தியது போதும், போய்விடு, போ!

ஏன் வந்தாய்?'' என்று கோபாவேசமாகக் கத்தினார்.

உலகமே என் முன் சுற்றுவதுபோன்ற ஒரு பிரமை எனக்கு ஏற்பட்டது. துக்கம் நெஞ்சைச் சுக்கல்களாகப் பிளந்தது. கண்களில் நீர் தாரையாக வழிந்தோடியது.

''ஐயோ! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? சாந்தமே உருக் கொண்ட நீங்களா இப்படிப் பேசுவது? ஐயோ!'' என்று நான் அலறினேன்.

''சுசீ! ஏன் வெயிலில் தனியே வந்தாய்? 'போன் செய்திருந்தால் காரை எடுத்துக்கொண்டு வந்திருப்பேனே? ஏன் அழுகிறாய்?'' என்று சாந்தமாக அவர் கேட்டது எனக்கு மீண்டும் அதிர்ச்சியைக் கொடுத்தது, என்ன! மீண்டும் ஒரு பயங்கரக் கனவா?

சே! இது என்ன மனப்பிரமை! இல்லை, மனப்பிரமை இல்லை. இன்று எனக்கு ஏதோ ஓர் அபூர்வ சக்தி ஏற்பட்டிருக்கவேண்டும். இல்லாவிடில் எப்படி எனக்கு இவர்கள் எல்லோரும் உள்ளே மனத்தில் நினைப்பதை என் காதுகளால் நன்றாகக் கேட்க முடிகிறது? இவ்வளவு பயங்கரமான சிந்தனைகளை வைத்துக்கொண்டு உதட்டிலே புன்னகையுடன் அல்லவா எல்லோரும் பேசுகிறார்கள்?

காகிதக் குவியலில் மூழ்கிக் கிடந்த என் கணவர் அருகில் சென்றேன். என் கால்கள் உணர்ச்சி வசத்தில் நடுங்கின பேச முடியாது துக்கம் நெஞ்சை அடைத்துக்கொள்ளவே மிகவும் திணறிக்கொண்டு, ''இதோ பாருங்கள், நடந்ததையெல்லாம் மறந்து விடுங்கள். உள்ளொன்று புறமொன்று என்று இனி நாம் வாழ வேண்டாம். கடமையினின்று தவறிய பாவி நான்தான். உங்கள் வாழ்க்கையை நரகமாக்கி நாசமாக்கிவிட்டேன். உண்மைதான். ஆனால் இனி அப்படிச் செய்யமாட்டேன். வாழ்க்கையின் உண்மையை இன்றுதான் உணர்ந்தேன். கடந்து போன நாட்களுக்காக என்னை மன்னித்து விடுங்கள். ஐயோ! 'மன்னித்தேன்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். வாயால் பேசாது



உள்ளத்தால் என்னை உதறித் தள்ளாதீர்கள், மன்னியுங்கள். என்னை மன்னியுங்கள்'' என்று கண்ணீர் கன்னங்கள் மீது வழிய விம்மி அழுதுகொண்டே அவர் காலடியில் விழுந்தேன்.

''மயக்கம் தெளிந்துவிட்டதம்மா. இந்தத் தண்ணீரைச் சாப்பிட்டுவிட்டு எழுந்து நீங்கள் வீட்டிற்குப்போகலாம்'' என்றாள் நர்ஸ் புன்முறுவலுடன். மன உறுதிதான் நோய்க்கு மருந்து என்ற தீர்மானத்துடன் பெட்டியை எடுத்துக்கொண்டு நர்ஸிங் ஹோமை விட்டுக் கிளம்பினேன் நாலு வருஷங்களாகக் காணாத ஒரு சாந்தி என் மனத்தைக் குளிரச் செய்தது.

## ரஞ்சிதத்தின் சஞ்சலம்

நாணத்தினால் முகம் சிவந்த யௌவன மங்கையைப் போன்று இளஞ் சூரிய வெளிச்சத்தில் மலர்ந்து நின்ற ரோஜா மலர்களை ரஞ்சிதத்தின் கை துரிதமாகப் பறித்துக் கூடையில் நிரப்பிக்கொண்டிருந்தது. கடைசியாகச் செடியில் நின்ற அந்த ஒரு மலரையும் வெடுக்கெனக் கிள்ளிக் கூடைக்குள் போட்டாள் அவள். பூவிதழ்மீது படிந்திருந்த பனித் துளிகள் பொல பொலவெனத் தெறித்தோடின. அதே சமயம் அதற்கு ஒத்துப் பாடுவது போன்று ரஞ்சிதத்தின் கருவிழிகளினின்றும் இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே உதிர்ந்தது. அவள் துக்கத்தினால் துடித்த தன் உதடுகளைக் கடித்துக்கொண்டு பூக் கூடையைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வீடு செல்லத் திரும்பினாள்.

''ரஞ்சிதம்! ரஞ்சிதம்!'' மெல்லிய குரல் அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. யாருடைய நினைவுக்காக அவளது கண்கள் நீரைக் கக்கினவோ அவனே எதிரில் சிரித்துக் கொண்டு வந்து நின்றான். தன் முகத்தை ஆத்தி